திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இதுவரை ஆரம்பிக்கப் பட்டுள்ள மகளிர் கூட்டுறவுப் பண்டகசாலைகளில் லாபம் ஏற்பட்டுள்ளதா? அல்லது நட்டத்தில் ஏதேனும் வேலை செய்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 26 மகளிர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் இருக்கின்றன. எந்தக் கூட்டுறவு பண்டகசாலைபற்றிக் கனம் உறுப்பினர் விவரம் தெரிந்துகொள்ள விரும்புகிறார் என்று குறிப்பிட்டு எழுதியனுப்பினால், அதுபற்றி விசாரித்துத் தகவல் கொடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மருத்துவத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளின் பேரில், வினா எண் 158, நாளைவரை தள்ளி வைக்கப்படுகிறது.

பனங்கருப்பட்டியிலிருந்து சர்க்கரை உற்பத்தி

***159 வினா.**—**திரு. டி. மார்டின் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள உடன்குடியில் பனங்கருப்பட்டியிலிருந்து சர்க்கரை செய்யும் தொழிற்சாலை ஒன்று நிறுவும் உத்தேசம் ஏதேனும் தற்சமயம் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) தற்சமயம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு டி. மார்டின் : நெல்லை மாவட்டத்தில் சாத்தான்குளம், உடன்குடி வட்டாரங்களில் ஏராளமான பனை மரங்கள் இருக்கின்ற காரணத்தாலும், இலங்கையிலிருந்து பனைவெல்லத் தொழில் செய்து கொண்டிருந்தவர்கள் இங்கு வர இருக்கும் நிலையினாலும், அங்கே இந்த விதமான சர்க்கரை ஆலையொன்றை அரசு லாப நோக்கத்தோடே நடத்தக் கூடிய வாய்ப்பு இருக்கும் காரணத்தாலும், அதை நடத்தக்கூடிய வாய்ப்பினை அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பொதுவாக, பனங்கருப்பட்டியிலிருந்து சர்க்கரை செய்யும் முறை எதுவும் நம்முடைய தமிழகத்தில் தற்போது நடைமுறையில் இல்லை. ஆனால், பனஞ்சாறிலிருந்து, அதாவது பதனீரைக் கொண்டு சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. கூட்டுறவு சம்மேளனங்களின் அமைப்பு முறைப்படி, அப்படிப்பட்ட கூட்டுறவு அமைப்பு முறைகளுக்கான நியதிகளுக்குட்பட்டு செயல்பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட வேண்டுகோள் ஏதேனும் வந்தால், அதைப் பரிசீலிக்கலாம்.

Thiru K. S. KOTHANDARAMIAH:—I wish to know from the Hon. Minister for Local Administration whether applications for starting sugar mills were received from Hosur Taluk and, if so, what the position about them is.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சர்க்கரை ஆலைக்கும் எனக்கும் தொடர்பு இல்லை. ஆகவே, அதுபற்றிய முறையீடுகள் ஏதும் வந்ததாக எனக்குத் தெரியவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : பதனீரிலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகள் எங்கெங்கே இருக்கின்றன ? அவை லாபத்தில் வேலை செய்கின்றனவா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தென் மாவட்டங்களில் பனையோலைகள் தாராள மாகக் கிடைக்கின்றன. அயல்நாடுகளில், பனையோலைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிற கூடை, பெட்டி, போன்ற பொருள்களுக்கு அதிக டிமாண்டு இருக்கிறது. ஆனால், அந்த டிமாண்டுக்குத் தக்கபடி நமது மாநிலத்திலி ருந்து ஏற்றுமதி செய்வதற்குள்ள வாய்ப்பு தற்போது இல்லாமலிருக்கும் சிக்கலான நிலை இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் முன்வந்து இந்தப் பொருள்களை உற்பத்தி செய்து, வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்குள்ள ஏற்பாட்டைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கேள்வி, சர்க்கரை பற்றியது. துணைக் கேள்வி ஓலையைப்பற்றியதாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடலாம்.

THIRU K. VINAYAKAM :—In the several exhibtions conducted by the Government we find sugar manufactured out of gur being sold by the co-operative stores and the Minister for Food has had occasion to taste it. Is the Government aware that the cost of production of sugar from palm gur is considerably higher when compared to the ordinary sugar available in the market and do the Government think that this is an economic possibility ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்தச் சர்க்கரை தயாரிப்பதிலே இரண்டு முறைகள் இருக்கின்றன. ஒன்று—கண்டசாரியிலிருந்து சர்க்கரை தயாரிப்பது. அது கரும்பிலிருந்து தயாரிக்கப்படுகிறது. ஒரு வேளை அதைக் கூட, தவறுகச் சுவைத்துப் பார்த்துவிட்டுச் சொல்லக் கூடும். இன்னொன்று பனங்கருப்பட்டியிலிருந்து அதாவது பதனீரிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இதன் விலை கிலோ ஒன்று நான்கு ரூபாய் ஆகும் என்று சொன்னதாக நினைவுக்கு வருகிறது. இது விவசாயப் பொருளாதாரத்திற்கு ஏற்றதாக வும் இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில், நான்கு கோடி பனை மரங்களில் இப்பொழுது பயன்படுத்தப்படுவது 40 லட்சம் பனைமரங்கள் தான். அவை முழுமையும் பயன்படுத்துகிற முயற்சியிலே ஈடுபடுவோ மானால் நமக்கிருக்கும் சர்க்கரைத் தட்டுப்பாடும் தீரும். நம்முடைய குறை களும் போகும். பொருளாதாரத்திற்கு ஏற்ற ஒரு திட்டமுமாகும்.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னாலேயே, பாரி கம்பெனியார், பதனீரிலிருந்து சர்க்கரை தயாரிப்பது லாபகரமாக இல்லை என்று, பல லட்சக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து, கைவிடப்பட்டதற்குப் பிறகு, இப்பொழுது கூட்டுறவு சொஸைட்டி களுக்கு பதனீர், கருப்பட்டியிலிருந்து சர்க்கரை செய்வதற்குக் கொடுக்கப் படுகிற ஒத்துழைப்பு, ஊக்குவிப்புகளை இனியாவது இந்தத் தமிழக அரசு ரத்து செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இது ஒரு குடிசைத் தொழிலை போல் மேற்கொள்ளப்படுகிறது. பெரிய இயந்திரத் தொழிலைப்போல் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. ஆங்காங்கு வேலை இழந்திருக்கக் கூடிய தொழி லாளர்களுக்கு வேலை கொடுக்கவும், கிராமப் புறங்களில் இருப்பவர்கள் ஓய்வு நேரத்தில் பணி புரிவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தவும் செய்யப் பட்டிருக்கக் கூடிய முறைகளாகும். ஆகவே, இதை ரத்து செய்யும் எண்ணம் எதும் அரசாங்கத்திற்கு இல்லை.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, பயனுள்ள, ஆரோக்கியத்திற்கு உறுதுணையாக இருக்கின்ற இந்தப் பனக் கருப்பட்டி சமீப காலத்தில் உற்பத்தி குறைவாக இருக்கிறது. அதற்குங் காரணம், அதிகமான பனைகளை அழித்து விடுகிறார்கள். அப்படி அழிப்பதி

1968 மார்ச் 6]

லிருந்து பனைகளைப் பாதுகாப்பதற்கு நம்முடைய அரசு ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்குமா? நம்முடைய அரசுக்குச் சொந்தமான காடுகளில் பனைகளைப் புதிதாக வளர்ப்பதற்கு ஏதாவது முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : பொதுவாக, இந்தப் பனங்கருப்பட்டி சர்க்கரை உற்பத்தி குறைந்து வருகிறதா என்பது பற்றி எனக்கு விவரம் இல்லை. இரண்டாவதாக, அப்படிக் குறைவதற்குக் காரணம், பனை மரங்கள் அழிக்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். நான் ஏற்கனவே கொடுத்த விடையின்படி, 40 கோடி பனை மரங்கள் இருக்க, நாம் இப்பொழுது 40 லட்சம் பனைமரங்களைத் தான் இதற்காகப் பயன்படுத்துகிறோம். ஆகவே, இன்னும் ஏராளமான பனைமரங்கள் பயன்படுத்தப்படாமலேயே இருந்து கொண்டிருக்கின்றன. சர்க்காருக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களிலும், மற்ற இடங்களிலும், பனை மரங்களை உற்பத்தி செய்து, பயன்படுத்துவதற்கான விண்ணப்பங்கள் வருமானால் நிச்சயமாக அவை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்னால் தள்ளிவைக்கப்பட்ட வினா எண் 154 இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படுகிறது.

Quality control in rice mills

*** 154 Q.—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the steps taken by the Government for enforcing quality controls in rice mills ?**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The licencees authorised to run rice mills in the State should take adequate precautions to see that the rice or paddy is kept in good condition. The percentage of polish that can be given to rice is also fixed as 3 to 5 per cent. The Government have employed technical staff who check the quality of the rice delivered to Government and also effect cuts under the provisions of the Madras Paddy and Rice (Maximum Prices) Control Order wherever the refractions exceed the prescribed limits. This ensures proper quality of the rice produced in the rice mills.

திரு எ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, கடைகளில் கிடைக்கக்கூடிய அரிசி மிகவும் மோசமாக இருக்கிறது என்ற புகார் தொடர்ந்து, அடிக்கடி, வந்து கொண்டே இருக்கிறது. அதற்குப் பிரதானமாக அரிசி மில் உடைமையாளர்கள்தான் காரணமாக இருக்கிறார்கள். துர்நாற்றமுள்ள தண்ணீரைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தி, நெல்லை ஊற வைத்து, இன்னும் பல விதமான கலப் படங்களைச் செய்து, உற்பத்தி செய்யும் பழக்கம் வளர்ந்துவிட்டதால், இதைக் கண்காணிப்பதற்காகவாவது மில்களில் திடீர் விஜயம் செய்து, கண்காணிக்கக்கூடிய அதிகாரத்துடன் கூடிய, பொதுஜனக் கமிட்டி அமைத்து ஓரளவு சீர்செய்ய அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இதற்காக க்வாலிடி கண்ட்ரோல் நிறுவனம் ஒன்றை, இந்தப் புதிய அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, ஏற்படுத்தி, அது மிகத் தெளிவான முறையில் செயல்படுகிறது. பரிசோதனை நடத்துவதற்காக 82 தொழில் நுட்பப் பணியாளர்கள் (டெக்னிகல் அஸிஸ்டென்ட்ஸ்) நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எந்த எந்த அரிசியெல்லாம் தரம் மோசமாக இருக்கிறது என்று ஆராய்ச்சி செய்வதற்காக, சென்னை, தஞ்சை, கடலூர் ஆகிய இடங்களில் லாபரடரிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ரீஜனல் ஸ்டோரேஜ் ஆபீசர்கள்—உயர்தர அதிகாரிகள்—இருவர் நியமிக்கப்பட்டு, அவர்களில் ஒருவர் தஞ்சையிலும் இன்னொருவர்